**ஹம்பாந்தோட்டை பிரதேச சபை**
**ஹம்பாந்தோட்டை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 மார்ச் 29 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந் நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 2019 மே 29 ஆந் திகதியும், விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2019 ஜூன் 11 திகதியும் சபை முதல்வருக்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து ஹம்பாந்தோட்டை பிரதேச சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### (அ) கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்கீட்டுக் குறைபாடுகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | ஹம்பாந்தோட்டை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ அலகில் இருந்து சபைக்கு கிடைத்திருந்த ரூபா 63,000 தொகை பெறுமதியான நீர்பம்பு மீளாய்வாண்டிற்காக நிதிக் கூற்றுக்களில் இருந்து விடுபட்டிருந்தது. | அனைத்து நிலையான சொத்துக்களும் கணக்கீடு செய்யப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ii) | மீளாய்வாண்டின் போது பொல்ஹிந்த சேதனப் பசளை நிலையக் களஞ்சியம் ஒன்று நிர்மாணித்தல் தொடர்பாக ரூபா 900,088 தொகை குறைவாகக் கடன்கொடுத்தோர் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (iii) | மீளாய்வாண்டில் மற்றும் முன்னைய ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்டிருந்த 07 நிர்மாண வேலைகளுக்காக செலவிடப் பட்டிருந்த கூட்டுப் பெறுமதி ரூபா 3,327,801 தொகையினை மூலதனப்படுத்தியிருக்க வில்லை. | அனைத்து நிலையான சொத்துக்களும் கணக்கீடு செய்யப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**(ஆ) இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 03 கணக்கு விடயங்கள் தொடர்பாக கூட்டுத்தொகை ரூபா 12,136,848 தொகைக்கான மீதிகள் மற்றும் அதனோடு தொடர்புடைய துணைப் பதிவேடுகள்/ பதிவேடுகளில் காட்டப்பட்டுள்ள மீதிகளிடையே கூட்டுத்தொகை ரூபா 200,884 இற்கான சமமின்மைகள் காணப்பட்டது. | குறிப்பிட்ட மீதிகளின் வித்தியாசங்கள் இணக்கஞ் செய்து சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**(இ) கணக்காய்விற்குத் தேவையான எழுத்து மூல சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|
| தேவையான தகவல்கள் சமர்ப்பிக்காமை யினால் கூட்டுத்தொகை ரூபா 85,425,637 தொகைக்கான 04 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமான மெய்மையாய்தல் செய்வதற்கு முடியாதிருந்தது. | நிதிக்கூற்றுக் களில் காட்டப்பட்டுள்ள கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | காணிகளை உரித்தாக்கி ஆதனங்களை பெறுமதி மதிப்பீடு செய்து நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் உட்படுத்தி சரியான முறையில் அட்டவணை பேணுவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

## 1.4 இணக்கமின்மை

### 1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மான ங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி | | | |
| (i) விதி 185 | சபையின் 02 நடைமுறைக் கணக்குகளில் காணப்பட்ட சராசரி மிகைப் பணம் மீதி முறையே ரூபா 1,792,156 தொகை மற்றும் ரூபா 8,939,600 தொகை எனினும் அதில் ஒரு பகுதியை ஏனும் முதலீடு செய்வதற்கு நடவடிக்கை | விதியின் பிரகாரம் செயற்பட வேண்டும். | நிர்மாண வேலைக்காக 10 சதவீத பிடிப்பணம் செலுத்த வேண்டியிருப் பதால் முதலீடு செய்வதற்கு இயலாமல் போனது எதிர்காலத்தில் நிலையான வைப்புக்கள் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

| | | | |
|---|---|---|---|
| | எடுத்திருக்கவில்லை. | | |
| (ii) விதி 193 | பாதீட்டுடன் மற்றும் வரவு மற்றும் செலவு விடயங்களை இணக்கஞ் செய்து மிகைகள் மற்றும் பற்றாக் குறைகள் தொடர்பாக காரணங்களைக் காட்டும் கூற்றொன்று கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவில்லை. | விதியின் பிரகாரம் செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் பாதீட்டு முரண்களுக்கு காரணங்கள் காட்டும் கூற்று தயாரித்து சமரப்பிக்கின்றேன். |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிச் குடியசரின் நிதிப் பிரமாணம் | | | |
| (i) நிதிப்பிரமாணம் 371(5) | ரூபா 50,098 தொகை பெறுமதியான முற்பணங்கள் தீர்க்கப்பட்டிருக்க வில்லை. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் செயற்பட வேண்டும். | ரூபா 3,339 தொகை தீர்க்கப்பட்டிருந்ததுடன் இனங்காண முடியாத மீதியை பதிவழிப்பதற்கு பொது கூட்ட அங்கீகாரம் 2019 மார்ச் 21 திகதி பெறப்பட்டது. |
| (ii) நிதிப்பிரமாணம் 571 | 2 வருடங்களை மிகைத்துள்ள ரூபா 2,647,466 தொகை பெறுமதியான 07 பொது வைப்பு மீதிகள் மற்றும் 10% பிடிபண வைப்புக்கள் 44 இனை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்க வில்லை. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் செயற்பட வேண்டும். | 2019 மார்ச் 21 திகதி நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் ரூபா 66,522 தொகையினை அரச வருமானத்திற்கு எடுப்பதற்கு மீதிக் கோவைகளை பரிசோதனை செய்து அரச வருமானத்திற்கு எடுப்பதற்கு தீர்மானித்துள்ளேன். |
| (iii) நிதிப்பிரமாணம் 702(3) | ஒப்பந்த வேலைகள் தொடர்பாக கையொப்பமிடப்படும் உடன்படிக்கைகளின் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பித்திருக்கவில்லை. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் செயற்பட வேண்டும். | 2019 ஆண்டு முதல் கையொப்பம் இடப்பட்டும் உடன்படிக்கைகளின் பிரதிகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கின்றேன். |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுகளின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம், ரூபா 12,488,338 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 8,629,022 தொகை ஆகக் காணப்பட்டது.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரி மற்றும் வரி | 1,988,492 | 2,631,265 | 1,833,323 | 1,304,694 | 7,224,500 | 7,753,057 | 6,919,927 | 833,131 |
| வாடகை | 8,455,900 | 5,603,000 | 5,553,900 | 39,400 | 1,157,100 | 6,332,943 | 6,257,893 | 75,050 |
| அனுமதிப் பத்திரக் கட்டணம் | 11,813,700 | 16,644,801 | 16,559,851 | 790,080 | 1,030,600 | 1,747,778 | 1,763,328 | 710,880 |
| ஏனைய வரு மானங்கள் | 7,491,300 | 6,291,823 | 1,870,591 | 21,195,890 | 6,916,100 | 9,610,153 | 4,932,870 | 22,120,460 |
| மொத்தம் | 29,749,392 | 31,170,889 | 25,817,665 | 23,330,064 | 20,328,300 | 25,443,931 | 19,874,018 | 23,739,521 |

### 2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது சேகரிக்கப்பட வேண்டிய ஒட்டுமொத்த வருமானம் ரூபா 54,910,410 தொகை எனினும், ஆண்டின் போது சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 25,817,665 தொகை ஆக காணப்பட்டமையால் வருமானம் சேகரித்தலின் முன்னேற்றம் 47 சதவீதமாகும். | நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டும். | 2019 ஆண்டில் ஆதனங்கள் தடைசெய்யும் நிகழ்ச்சித் திட்டம் ஒன்று செயற்படுத்துவதுடன் முத்திரைக் கட்டணம், நீதிமன்றத் தண்டப் பணம் தொடர்பாக ஆளுனரிடம் கலந்துரையாடி பெற்றுக் கொள் வதற்கு விண்ணப்பித்துள்ளேன். |

**2.2.3 வீதவரியும் வரியும்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிலுவை வீதவரி ரூபா 752,669 தொகை ஆக காணப்பட்டதுடன், அந்த நிலுவையை அறவீடு செய்வதற்கு பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 158(1) இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டும். | இவ்வாண்டில் ஆதனங்களை தடைசெய்யும் நிகழ்சித் திட்டமொன்று ஒழுங்குபடுத்தி அறவிடப்பட வேண்டிய நிலுவை வரித் தொகைகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**2.2.4 அனுமதிப்பத்திரக் கட்டணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது பெற வேண்டிய அனுமதிப்பத்திரக் கட்டணம் ரூபா 710,880 தொகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவை அனுமதிப் பத்திரக் கட்டணம் அறவிடப்பட வேண்டும். | இந்த தொகை கால விதிப்பை தாண்டியிருப்பதனால் அறவீடு செய்வதற்கு முடியாதுள்ளதுடன் பதிவழிப்பதற்கு தேவையான அட்டவணை தயாரித்து விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரின் அங்கீகாரத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது. |

**2.2.5 நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் 2018 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் முறையே ரூபா 5,924,866 தொகை மற்றும் ரூபா 15,184,214 தொகையாகக் காணப்பட்டதுடன் அவற்றில் 05 வருடங்கள் மிகைத்துள்ள மீதிகள் முறையே ரூபா 2,651,012 தொகை மற்றும் ரூபா 7,393,853 தொகை ஆகும். | நிலுவை நீதிமன்றத் தண்டப் பணத்தை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2019 பெப்ரவரி 20 திகதி நிலுவை முத்திரைக் கட்டணம் மற்றும் நீதிமன்றத் தண்டப் பணம் முறையே ரூபா 462,461 தொகை ரூபா 2,573,539 தொகை அறவிடப்பட்டதுடன், மீதித் தொகையை விரைவாக பெற்றுக்கொள்ள நடடிக்கை எடுப்பேன். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றுகை**

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் மக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவை மற்றும் பொது பாதைகள் மீதான கருமங்களை முறைப்படுத்தலும் கட்டுப்படுத்துதலும் பொதுமக்களின் சுகபோக வாழ்க்கை, வசதிகள் மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செய்பணிகளை நிறைவேற்றுவது தொடர்பாக கண்டறியப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

**(அ) செய்பணிகளை நிறைவேற்றுவதில் தாமதம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 ஆண்டிற்கான பாதீட்டில் அடங்கியுள்ள 48 அபிவிருத்தி திட்டங்களில் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு 06 அபிவிருத்தித் திட்டங்கள் மாத்திரம் செயற்படுத்தப்பட்டிருந்தது. | பாதீட்டில் அடங்கியுள்ள அபிவிருத்தித் திட்டங்கள் நிறைவேற்றிக் கொள்வது தொடர்பாக கவனம் செலுத்தப்பட வேண்டும். | எதிர்பார்த்த வேலைத் திட்டங்களுக்காக நிதி ஒதுக்கீடுகள் கிடைக்காமை மற்றும் செயற்திட்ட அறிக்கைக்கான அங்கீகாரம் கிடைக்காமை. |

**(ஆ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்திக்கான 2030 நிகழ்ச்சி நிரலின் நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளுக்கான உலகளாவிய சுட்டிகளின் மூலம் சபையின் அதிகாரப் பிரதேசத்தின் பொது மக்களின் வாழ்க்கைத் தரம் மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கான நீண்ட காலத் திட்டங்கள் சபையினால் தயாரித்திருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளை அறவீடு செய்வதற்கான சுட்டிகள் இனங்கண்டு அதன் பிரகாரம் வருடாந்த இலக்குகளை நெருங்கும் முன்னேற்றத்தை அளக்க வேண்டும். | நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளுக்கு நீண்ட காலத் திட்டமொன்று தயாரித்திருக்காவிடினும் இடையறாமல் அவ் விடயம் நடைபெற்றுக் கொண்டிருப்பதுடன் எதிர்காலத்தில் இது தொடர்பாக கவனம் செலுத்தி திட்டங்கள் தயாரிக்கப்படும். |

## 3.2 முகாமைத்துவத் திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெற வேண்டிய வர்த்தக நிலையங்கள் தொடர்பாக இனங்காணல் மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன் அதிகாரப் பிரதேசத்தில் செயற்படும் 10 கைத்தொழில்களுக்கான சுற்றாடல் அனுமதிப் பத்திரம் வழங்கல் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரம் பெற வேண்டும். | சில கைத்தொழில்களுக்கு அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டி ருந்ததுடன் அனுமதிப்பத்திரம் பெற்றிருக்காத கைத்தொழில் களை இனங்கண்டு நிரந்தர மேற்பார்வையொன்று மேற் கொண்டு அந்த கைத்தொழில் களுக்கு அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்வதற்கு தொடர்புபடுத்துவேன். |
| (ஆ) | சபையின் அதிகாரப் பிரதேசத்தில் நிறுவப்பட்டுள்ள தொலைதொடர்பு கோபுரங்கள் தொடர்பாக கணிப்பீடு ஒன்று மேற்கொண்டிருக்கவில்லை. | தொலைபேசி கோபுரங்கள் தொடர்பாக கணிப்பீடு மேற்கொள்ளப் பட வேண்டும். | சில பிரதேசத்தில் கணிப்பீடு மேற்கொள்ளப்பட்டதுடன் ஏனைய பகுதிகளிலும் எதிர்காலத்தில் கணிப்பீட்டு அலுவல்கள் மேற்கொள்வேன். |
| (இ) | நகர அபிவிருத்தி மற்றும் புனித நில அமைச்சரின் வெளியிடப்பட்ட 2009 ஏப்ரல் 17 திகதிய 8/1597 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானியின் V ஆம் அட்டவணையின் உபபிரிவு 4(5) இன் பிரகாரம் அனைத்து நிர்மாண வேலைகள்/ அபிவிருத்திகளுக்கு மாக இணக்கச் சான்றிதழ் பெற வேண்டுமெனினும் சபையின் அதிகாரப் பிரதேசத்தில் நிறுவப்பட்டுள்ள 10 தொலை தொடர்பு கோபுரங்களில் 06 கோபுரங்களுக்காக இணக்கச் சான்றிதழ் வழங்கப்பட்டிருக்க வில்லை. | வர்த்தமானியின் பிரகாரம் செயற்பட வேண்டும். | இணக்கச் சான்றிதழ் பெற்றுக் கொள்ளும் படி குறிப்பிட்டு நிறுவனங்களுக்கு பதிவுத் தபால் மூலம் அறிவிக்கப்பட்டது. |

### 3.3 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | அங்கீகரிக்கப்பட்டுள்ள 13 பதவி களில் காணப்பட்ட வெற்றிடங்களை நிரப்புவதற்காக மீளாய்வாண்டு இறுதி வரையும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பதவியணி வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஊழியர் வெற்றிடங்களை நிரப்புவதற்காக பிரதான செயலாளரின் மற்றும் ஆளுனரின் அங்கீகாரம் பெறுவதற்காக சமர்ப்பித் துள்ளேன். ஒரு பதவிக்காக நேர்முகப் பரீட்சை நடத்தப்பட்டு முடிவடைந்துள்ளது. |
| (ஆ) | சபையினால் சேர்க்கப்பட்டிருந்த 09 ஊழியர்கள் நிரந்தர பதவிக் கடமைகளுக்கு புறம்பாக கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். | உத்தியோகத்தர் குறிப்பிட்ட கடமைகளில் ஈடுபடுத்தப்பட வேண்டும். | ஊழியர் பதவி வெற்றிடங்கள் காணப்படுவதுடன் நாளாந்த அத்தியவசியக் கடமைகளுக்காக உத்தியோகத்தர்களின் அறிவின் பிரகாரம் கடமைகள் நிறைவேற்றிக் கொண்டேன். |
| (இ) | இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள மற்றும் சேவையை விட்டுச் சென்றுள்ள ஊழியர்களிடம் அறவிடப்பட வேண்டிய ரூபா 184,360 தொகையினை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ஊழியர் கடன் அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் இந்த முழுத் தொகையையும் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

### 3.4 செயற்பாட்டுத் திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | பிரதேச சபையினால் அனுபவிக்கும் 06 காணிகள் மற்றும் 10 கட்டிடங் களின் உரிமையை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | உரித்தினை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | 03 காணிகளுக்கான காணி உறுதிகள் அல்லது வேறு சட்டரீதியான ஆவணங்கள் காணப்படாததுடன், அனைத்து காணிகள் உரித்தாக்கித் தருமாறு பிரதேச செயலாளரை வேண்டியுள்ளேன். ஏனைய 03 காணிகளையும் கட்டிங்களையும் பெறுமதி மதிப்பீடு செய்து தருமாறு பெறுமதி மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு விண்ணப்பித்துள்ளேன். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | ரூபா 720,000 பெறுமதியான முகாமைத்துவ மென்பொருள் முறைமை கொள்வனவு செய்து ஒரு வருடத்தை விட மிகையான காலம் கடந்திருந்த போதிலும் ஒரு கணினி மென்பொருள் முறைமையும் குறிக்கோள்சார் செயற்பாட்டு மட்டத்தில் காணப்படவில்லை. | இந்த முறைமையை உச்ச செயற்பாட்டு மட்டத்தில் பேணப்பட வேண்டும். | தற்போது கணினி மென்பொருட்களுக்கு தகவல்கள் சேகரிக்கப்படுவதுடன் அந்த முறைமைகளின் மூலம் பயன்பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |
| (இ) | 2017 ஆண்டு ஜூலை 31 திகதி 10 CCTV கமராக்கள் கொள்வனவு செய்வதற்காக நிதி மற்றும் கொள்கைகள் குழுக் கூட்டத்தின் விதப்புரை பெறப்பட்டு 2018 ஆண்டிற்காக பாதீட்டின் மூலம் இந்த செயற்திட்டத்திற்காக ஏற்பாடுகள் ஒதுக்காமல் ரூபா 733,635 தொகைக்கு 24 கமராக்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. | சரியான பாதீட்டு முகாமைத்துவம் பேணப்பட்டு அங்கீகாரத்தின் பிரகாரம் கொள்வனவு மேற்கொள்ளப்பட வேண்டும். | ஆரம்பத்தில் 10 கமராக்களை பொறுத்துவதற்காக குழு தீர்மானித்திருந்த போதிலும் புதிய அலுவலகத்திற்கு வந்ததும் அவை போதியளவினதாக காணப்படாமையால் மாவட்ட செயலகத்தின் இயந்திர பொறியியலாளரின் மற்றும் மின்சார சபை பிரதான பொறியியலாளர் ஆகியோர் வருகைதந்து கமரா பொறுத்துவதற்காக ஆலோசனைகள் வழங்கினார்கள். |

**3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**3.5.1 உரித்தாக்கப்படாத சொத்துக்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபையினால் அனுபவிக்கப்படும் 07 விளையாட்டு மைதானங்கள் 21 மயானங்கள் 5 சனசமூக நிலையங்களின் சட்டரீதியான உரிமையை மீளாய்வாண்டின் போதும் சபைக்கு உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சொத்துக்கள் உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | இதுவரை 14 காணிகளின் அளவை விடயங்கள் பூர்த்தி செய்திருந்த போதிலும் சபைக்கு உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்காததுடன் மீதியான வற்றை அளவை செய்து சபைக்கு உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | 2 வருமான விடயங்களை பிரதி கூலமான முரண்களினதும் கூட்டுத்தொகை ரூபா 3,595,945 தொகையாகக் காணப்பட்டதுடன், அவை 26 சதவீதம் முதல் 34 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது. | நடைமுறை சாத்தியமான மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டும். | டெங்கு ஒழிப்பு நிகழ்ச்சித் திட்டத்திற்காக சபையின் இயந்திரங்கள் பயன்படுத்தப் பட்டமையால் இயந்திரங்களை வாடகைக்கு கொடுப்பதற்கு இயலாமல் இருந்தது காரணமாக இருந்தது. |
| (ஆ) | 6 செலவு விடயங்களின் கூட்டுத்தொகை ரூபா 12,880,361 தொகைக்கான சேமிப்பு காணப்பட்டதுடன், அவை 24 சதவீதம் முதல் 62 சதவீதம் வரை வீச்சில் காணப்பட்டது. | நடைமுறை சாத்தியமான மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டும். | புதிய ஊழியர்களைச் சேர்ப்பதற்கு ஏற்பாடுகள் மேற்கொண்டிருந்த போதிலும் அந்த ஊழியர்கள் சேர்க்கப்படாமை மற்றும் காணி அளவை செய்வதற்கு ஒதுக்கப்பட்ட பணம் ஆண்டின் போது செலுத்தப்படாமை காரணமாகியது. |